ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2347/11 - 2023 අගෝස්තු මස 31 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.08.31

*2347/11 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 31 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ சட்டத்தின் 16(2ஈ) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்***

உத்தேச 134 மெகாவோட் காற்றலை செயற்றிட்டத்தின் (2 ஆம் கட்டம்) பூநகரி, கிளிநொச்சி மாவட்டம்

**சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை**

*1988 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க மற்றும் 2011 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க ஒழுங்குவிதிகளின் மூலம் திருத்தப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் நியதிகளுக்கு அமைவாக கொழும்பு 07, ஆனந்த குமாரசாமி மாவத்தை, 72 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள இலங்கை நிலையான எரிசக்தி அதிகார சபையினால் சமர்ப்பிக்கப்படும் உத்தேச பூநகரி 134 மெகாவோட் காற்றலை செயற்றிட்டத்துக்கு (2 ஆம் கட்டம்) சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை பொது மக்களின் பரிசீலனைக்காக கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் நாள் முழுவதும் முற்பகல் 8.30 மணி முதல் பிற்பகல் 4.15 மணி வரை 2023.08.31 ஆந் திகதி முதல் 2023.10.13 ஆந் திகதி வரை 30 நாட்களுக்கு வைக்கப்பட்டிருக்கும் (வார இறுதி மற்றும் அரச விடுமுறை நாட்களைத் தவிர).*

இதற்கு மேலதிகமாக கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.coastal.gov.lk இல் மும்மொழிகளிலும் தரப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| (1) நகர அபிவிருத்தி மற்றும் வீட்டு அமைச்சு | - | 12 ஆவது மாடி, "செத்சிரிபாய", 2 ஆம் கட்டம், பத்தரமுல்லை |
| (2) கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம் | - | புதிய செயலகம், 4 ஆவது மாடி, மாளிகாவத்தை, கொழும்பு 10. |
| (3) மத்திய சுற்றாடல் அதிகார சபை | - | இல. 104, "பரிசர பியச", டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை. |
| (4) வன விலங்குகள் பாதுகாப்புத் திணைக்களம் | - | இல. 811/A, ஜயந்திபுர மாவத்தை, பத்தரமுல்லை |

1A - G 40213 – 26 (2023/08)

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(5) மாவட்ட செயலாளர் அலுவலகம் - கிளிநொச்சி
(6) பிரதேச செயலாளர் அலுவலகம் - பூநகரி
(7) பிரதேச சபை - பூநகரி
(8) கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்களம் - கிளிநொச்சி

இந்த உத்தேச செயற்றிட்டத்தினால் சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கம் தொடர்பான அறிக்கை சம்பந்தமாக பொதுமக்களின் கருத்துக்களை 2023.08.31 ஆந் திகதி முதல் 30 நாட்களுக்கு கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு எழுத்து மூலமாகச் சமர்ப்பிக்குமாறு அறியத்தருகிறேன்.

பொறியியலாளர் **ஆர். ஏ. எஸ். ரணவக்க**,
பணிப்பாளர் நாயகம்,
கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம்.

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம்,
4 ஆவது மாடி,
புதிய செயலகம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.
தொலைபேசி இல. : 011-2449754, 011-2387922, 011-2449197.
தொலைநகல் இல. : 011-2438005, 011-2472623.
மின்னஞ்சல் : dg.ccd.lk@gmail.com

EOB 08-0278

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.